# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 178/மா/2025**
**நாள்: 27.10.2025**

து.பவானி,
தேவகோட்டை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
காரைக்குடி மாநகராட்சி – எதிர்மனுதாரர்

தேவகோட்டை, S.M. மஹால் ரோடு, சிதம்பரநாதபுரம் மேற்கு 4வது தெரு, கதவு எண்.21 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி.து.பவானி என்பவரின் 14.03.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.03.2025–ல் பெறப்பட்டு, 178/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தேவகோட்டை, S.M. மஹால் ரோடு, சிதம்பரநாதபுரம் மேற்கு 4வது தெரு, கதவு எண்.21 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி து.பவானி, என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 14.03.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 15 வருட காலம் பணியாற்றி வருகின்றேன். காரைக்குடி மாநகராட்சியில் 5வருடம் புள்ளி விவரக் குறிப்பாளராகவும், பின் பதவி உயர்வு பெற்று 5 வருட காலமாக உதவி திட்ட அமைப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது கணவர் காலமாகி 23 வருடங்களுக்கு மேலாகிறது. என்னுடைய வருமானத்தில் தான் என் பிள்ளைகள், எனது அம்மா மற்றும் மாமியாரை கவனித்து வருகிறேன். நான் இதுவரை எனது பணியினை தெய்வமாக கருதி நல்ல முறையில் பணியாற்றி அனைத்து ஆணையாளர்களிடமும் நல்ல பெயர் வாங்கியுள்ளேன். தற்போது உள்ள ஆணையாளரிடமும் திருமதி.சித்ரா சுகுமார் நல்ல முறையில் தான் பணியாற்றினேன்.

சில சம்பந்தமில்லாத விஷயங்களை நான் செய்ததாக கூறி ஆணையாளர் திருமதி.சித்ரா சுகுமார் என்னை கண்டித்தார்கள். அது பொய்யென நிரூபித்தேன். அதிலிருந்து என்னிடம் விரோத போக்குடன் எனது பணியை செய்யவிடாமல் தடுப்பது

எனக்கு சம்பந்தமில்லாத பணிகளை அடுக்கடுக்காக எனக்கு உத்தரவுகளை பிறப்பிப்பது தேவையில்லாத குற்றச்சாட்டுக்களை சுமத்துவது, பொய்யான குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்குவது, எனது ஊதியத்தை மட்டும் ( டிசம்பர் 2024 முதல் இன்று வரை) தாமதமாக வழங்குவது என ஏகப்பட்ட மன உளைச்சலுக்கு ஆளாக்கி வருகிறார்கள். இதனால் மிகவும் இரத்த அழுத்தம் அதிகமாகி 20 நாட்கள் (பிப்ரவரி 1 முதல் 20 வரை) மருத்துவச்சான்றுடன் மருத்துவ விடுப்பு விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பத்தை ஆணையாளர் அவர்கள் மருத்துவ குழுவிற்கு அனுப்பி 20.02.2025 அன்று நான் மருத்துவ குழுவிற்கு ஆஜராகி என்னை பரிசோதனை செய்து மருத்துவ விடுப்பை அனுமதித்து சான்றிதழ் வழங்கினார்கள்.

பணியில் சேர ஆணையாளரை சந்திக்க கடிதத்துடன் சென்றேன். என்னை பார்க்க மறுத்து விட்டார்கள். ஆனால் மறுநாளே எனக்கு வேறு பணி வழங்கி (ஊராட்சி அலுவலகத்திற்கு அனுப்பி விட்டார்கள்). அந்த பணியையும் செய்து கொண்டு தான் இருக்கிறேன். எனது டிசம்பர் 2024 ஊதியத்தை ஜனவரி 20 தான் வழங்கினார்கள். ஜனவரி 2025 ஊதியத்தை மார்ச் 13–ல் வழங்கியுள்ளார்கள். பிப்ரவரி ஊதியத்திற்கு 8 நாட்களுக்கு மட்டும் வழங்கியுள்ளார்கள். மீதமுள்ள 20 நாள் ஊதியத்தை மெதுவாக வழங்குங்கள் என பிரிவு எழுத்தரிடம் கூறியுள்ளார்கள். இப்படி எனது வாழ்வாதாரத்தை பாதிக்கும் அளவிற்கு மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறார்கள். இதனால் குடும்பத்திற்கான வரவு செலவு செய்வதில் கடன் வாங்கி அனாவசியமாக வட்டி கட்டி வருகிறேன். எனது மகளின் திருமணத்திற்கு வாங்கிய வங்கி கடனை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்த இயலாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறேன். எதனால் இப்படி என்னை தண்டிக்கிறார்கள் என்பதை தாங்கள் தான் விசாரணை செய்து எனக்கு நல்ல முடிவை பெற்றுத்தர வேண்டும். இனி வருங்காலங்களில் இது போன்று எனக்கு நடந்தது போல் இனி யாருக்கும் நடக்காமலும் நல்ல ஒரு தீர்ப்பை கருணைகூர்ந்து விசாரணை செய்து வழங்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 03.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் காரைக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. இதற்கிடையில் 18.06.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்ட மனுதாரர் திருமதி து. பவானி அவர்களின் நாளிடப்படாத மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

“நான் காரைக்குடி மாநகராட்சியில் பணிபுரிந்து வருகின்றேன். நான் தங்களுக்கு 14.03.2025 அன்று எனக்கு ஊதியம் வழங்காதது தொடர்பாக மனு செய்திருந்தேன். மனுவினை தாங்கள் விசாரணைக்கு எடுத்துக் கொண்டதாக 10.06.2025 அன்று எனது முகவரிக்கு தபால் அனுப்பியதை பெற்றுக்கொண்டேன். மிக்க நன்றி. மேலும், தற்போது நான், எனக்கு வழங்க வேண்டிய ஊதியத்தை (ஜனவரி 2025க்கான ஊதியத்தை மார்ச் 23ஆம் தேதியும், பிப்ரவரி 2025க்கான ஊதியம் மே 13ஆம் தேதியும்) நான் புகார் அளித்த ஆணையாளர் மாறுதலில் சென்ற பிறகு தற்போது பணியில் உள்ள ஆணையாளர் அவர்கள் வழங்க பெற்றுக் கொண்டேன் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான், திருமதி.சித்ரா, ஆணையாளர் அவர்கள் மீது கொடுத்த புகாரை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். ஏனென்றால், மூன்று மாத காலமாக அவர்கள் என்னை பல மன உளைச்சலுக்கு ஆளாக்கி உடல் அளவிலும் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டேன். அவர்களும் பணிமாறுதலில் மதுரைக்கு சென்றுவிட்டார்கள். இனிமேல் விசாரணை என்ற பெயரில் அவர்களை சந்தித்து விசாரணை செய்து மேலும் என் மேல் விரோதத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என நினைக்கிறேன். என்னுடைய குடும்ப சூழ்நிலையை மனத்தில் கொண்டு என்னுடைய புகாரை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். இதுநாள் வரை

தங்களுக்கும் தங்கள் அலுவலகப் பணியாளர்களுக்கும் என்னால் தொந்தரவு ஏற்பட்டிருந்தால் மன்னிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. காரைக்குடி மாநகராட்சி ஆணையாளர் தன்னுடைய 19.06.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 0514/2025/சி1–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

"காரைக்குடி மாநகராட்சியில் கணினி உதவித் திட்ட அமைப்பாளராக பணிபுரிந்து வரும் திருமதி து. பவானி என்பவர் அளித்துள்ள புகார் குறித்து காரைக்குடி மாநகராட்சி 13.06.2025 நாளிட்ட குறிப்பாணை வழங்கப்பட்டது. அதன்படி 16.06.2025 நாளிட்ட மனுதாரரின் விளக்கக் கடிதம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்ற விவரத்தினையும் அன்புடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், தனியரின் விளக்கத்தில் அவர்களுக்கு உரிய ஊதிய பயன்கள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டதால், இம்மனுவில் மனுதாரர் குறிப்பாக ஊதியப் பயன்களை மட்டுமே வலியுறுத்தியுள்ளதால், ஊதிய பயன்கள் அனைத்தும் வழங்கப்பட்டு விட்டது என்ற விபரத்தினை அன்புடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் மனுக்கள் மற்றும் காரைக்குடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் 15 வருட காலம் பணியாற்றி வந்துள்ளதும், காரைக்குடி மாநகராட்சியில் 5வருடம் புள்ளி விவரக் குறிப்பாளராகவும், பின் பதவி உயர்வு பெற்று 5 வருட காலமாக உதவி திட்ட அமைப்பாளராக பணிபுரிந்து வந்துள்ளதும், அப்பொழுது இருந்த ஆணையாளர் அவரது பணியை செய்யவிடாமல் தடுப்பதும், மனுதாரருக்கு சம்பந்தமில்லாத பணிகளை செய்ய உத்தரவுகளை பிறப்பித்து தேவையில்லாத குற்றச்சாட்டுக்களை சுமத்துவது மற்றும் பொய்யான குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கியுள்ளதும், 2024 டிசம்பர் மாதம் முதல் இன்று வரை (14.03.2025) ஊதியம் தாமதமாக வழங்கப்பட்டுள்ளதும், மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது. மேலும் மனுதாரர் புகார் அளித்த மாநகராட்சி ஆணையர் மாறுதலில் சென்று விட்டதாலும், விசாரணை என்ற பெயரில் விரோதத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என நினைப்பதாலும், தற்பொழுது அவரது குடும்ப சூழ்நிலையை மனத்தில் கொண்டு தன்னுடைய புகாரை வாபஸ் வாங்கிக் கொள்வதாகத் தெரிவித்திருப்பதும் மனுதாரரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

காரைக்குடி மாநகராட்சியில் கணினி உதவித் திட்ட அமைப்பாளராக பணிபுரிந்து வரும் திருமதி து. பவானி என்பவர் அளித்துள்ள புகார் குறித்து காரைக்குடி மாநகராட்சி 13.06.2025 நாளிட்ட குறிப்பாணை வழங்கப்பட்டதின்படி, 16.06.2025 நாளிட்ட மனுதாரரின் விளக்கக் கடிதத்தில் உரிய ஊதிய பயன்கள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டது எனவும், இம்மனுவில் மனுதாரர் குறிப்பாக ஊதியப் பயன்களை மட்டுமே வலியுறுத்தியுள்ளதால், ஊதியப் பயன்கள் அனைத்தும் வழங்கப்பட்டு விட்டது என்ற விவரம் காரைக்குடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம் வழங்கப்பட்டு விட்டதாக, மனுதாரர் மற்றும் காரைக்குடி மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு அக்டோபர் 27-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திருமதி.து.பவானி,
21, சிதம்பரநாதபுரம், மேற்கு 4வது தெரு,
S.M. மஹால் ரோடு, தேவகோட்டை.

2) ஆணையாளர்,
காரைக்குடி மாநகராட்சி,
காரைக்குடி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் ( Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.